# பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யார்?




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# இப்பொழுது, பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் உபத்திரவ காலம் வருமுன்பு எய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்டவர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-0323 — ஆறாம் முத்திரை

104 இப்பொழுது, சென்ற இரவு ஆராதனையில் நமக்கு அந்த முத்திரையில் வெளியான மகத்தான இரகசியம் அது வரை, அதைக் குறித்து நான் கொண்டிருந்த கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. அதுதான் சரியென்று யூகித்துக் கொண்டிருந்தோம். பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் ஆதிகால சபையில் இரத்த சாட்சிகளாக மரித்த கிறிஸ்தவர்களென்று நான் எண்ணியிருந்தேன். ஆனால் கடந்த இரவு தேவனாகிய கர்த்தர் நமக்காக அம்முத்திரையை உடைத்தபோது, அது முற்றிலும் அறிவிற்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. அது அந்த ஆத்துமாக்கள் அல்ல

என்று நாம் கண்டறிந்தோம். அந்த ஆத்துமாக்கள் இரத்த சாட்சிகளாக மரித்த கிறிஸ்தவர்களல்லவென்றும். அவர்கள் ஏற்கனவே மகிமையில் பிரவேசித்துவிட்டனர், அவர்கள் அந்த நேரத்தில்...வருகின்ற யூதர்கள் என்று நாம் காண்கிறோம்.

105 அந்த ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் அழைக்கப்படுவதை நாம் இன்று இரவும், நாளை இரவும் காணப் போகிறோம். அந்த 1,44,000 பேர்கள் ஆறாவது ஏழாவது முத்திரைகளுக்கிடையே அழைக்கப்படுகின்றனர்.

106 பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள், கொல்லப்பட்ட இரத்த சாட்சிகள்—யூதர்கள். இன்னும் கொடுக்கப்படாமல்...அவர்கள் வெள்ளை அங்கி உடையவராயிருந்தனர். அவர்களுடைய பெயர்

கள் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான வரின் ஜீவ புஸ்தகத்தில் இருந்தன. அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை யங்கி கொடுக்கப்பட்டது. நாம் அதைப் படித்தோம். இனிவரப்போகும் உபத்திரவ காலத்திற்கு முன்பிருந்த காலத்தில் நடந்த யுத்தத்தின்போது, எல்லோராலும் வெறுக் கப்பட்டனர். **ஜெர்மானிய தேசத்தில் எய்க்மன் கோடிக்கணக்கான யூதர்களைக் கொன்று போட்டான். அதைப் பற்றிய விசா ரணையை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அவர் கள் யூதர்கள் என்ற ஒரேக் காரணத்தால் கோடிக்கணக்கில் குற்றமற்ற அந்த மக்கள் கொலை செய்யப்பட்டனர்.**

107 “அவர்கள் தேவ வசனத்தினிமித் தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித் தமும் கொல்லப்பட்டதாக” வேதம் உரைக்

கிறது. ஆனால் மணவாட்டி தேவனுடைய வார்த்தையாகவும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியையும் கொண்டிருப்பாள் என்று நாம் காண்கிறோம். இவர்களிடம் இயேசுவைப் பற்றிய சாட்சி இல்லை.

108 “இஸ்ரவேலர் எல்லோரும்—முன் குறிக்கப்பட்ட இஸ்ரவேலர் இரட்சிக்கப்படுவார்களென்று” ரோமர் 11-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அதை நாம் இப்பொழுது அறிந்துள்ளோம். அந்த ஆத்துமாக்கள் அங்கே உள்ளன என்று நாம் காண்கிறோம்.

109 இப்பொழுது நாம் அதை கூர்ந்து கவனிப்போம். ஏன் அது முன்பு இல்லாதிருந்தது? ஏனெனில் அது முன்பு சம்பவிக்கவில்லை. இப்பொழுது அதை நம்மால் காணமுடிகின்றது. நீங்கள் பாருங்கள். பாருங்கள், மகா பரிசுத்தாவியானவர்

காலங்கள்தோறும் நடக்க இருப்பவை களைக் கண்டவைகள் இப்பொழுது நமக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. இப்பொழுது நாம் அங்கே சம்பவித்தவைகளைப் பார்க் கிறோம். அது சத்தியம் என்று காண்கி றோம். அந்த ஆத்துமாக்கள் அங்கேதான் இருக்கின்றன.

110 **இப்பொழுது, பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் உபத்திரவ காலம் வருமுன்பு எய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்டவர் கள்.** இவர்கள் ஆறாம் முத்திரைக்கும் ஏழாம் முத்திரைக்கும் இடையே உயிர்த் தியாகம் செய்யும் ஒரு இலட்சத்து நாற் பத்து நாலாயிரம் பேர்களுக்கு முன்னடை யாளமாயிருக்கின்றனர். பாருங்கள்?



பாவம், அந்த ஜனங்கள் குருடாக்கப்பட்டனர். ஆகவேதான் அவர்கள் ஏய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்டனர். உட்பிரவேசிக்க அவர்களுக்கு உரிமையிருந்து. ஆனால் நம்மைத் தெரிந்து கொள்வதற்கென அவர்கள் சொந்த பிதா அவர்களைக் குருடாக்க வேண்டியதாயிற்று.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-0323 — ஆறாம் முத்திரை

210 தானியேலின் எழுபது வாரங்களில் அடங்கியுள்ள மூன்றரை வருட காலத்தைப் பற்றி (நான் கூறினேன்.) நாம் அதைக் கண்டறிந்தோம்.

211 அதை இன்னும் நான் விவரிக்க விரும்புகிறேன். ஏனெனில் இங்குள்ள சிலர் அதை நன்றாகக் கவனிக்கின்றனர். வேத போதகன் என்ற முறையில் நான்—நான் இதனைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

212 அந்த எழுபது வாரங்கள் வருவதைக் கவனியுங்கள். தானியேல் யூதர்களின் முடிவில் அந்த நேரமானது வரு

வதை தரிசனத்தில் காண்கிறான். எழுபது வாரங்கள் நியமிக்கப்பட்டுள்ளதென்றும், அந்த ஏழாவது வாரத்தினில், அதன் மத்தியில் மேசியா பலியாக சங்கரிக்கப்படுவாரென்றும் அவன் கூறினான். அவன் கூறியவாறே அது நிகழ்ந்தது.

213 அதன்பின்பு தேவன் புறஜாதிகளுடன் தொடர்புகொண்டு அவருடைய நாமத்திற்கென்று ஒரு கூட்ட ஜனத்தைத் தெரிந்தெடுக்கிறார். அது முடிவு பெற்றவுடன் புறஜாதி சபை மணவாட்டி மேலே எடுக்கப்படுகிறாள்.

214 ஆகவே அவர் அதைச் செய்தபோது, அந்த புத்தியில்லாத கன்னிகை, சபையானது...மணவாட்டி மேலே சென்றுவிட்டாள். சபையானது புறம்பான இருளில்

தள்ளப்படுகின்றது. “அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்”. அதே சமயத்தில் ஜனங்களின் மேல் உபத்திரவம் விழுகின்றது.

215 உபத்திரவம் அவ்வாறு விழும் போது, வெளிப்படுத்தல் 11-ம் அதிகாரத்தில் கூறப்பட்ட இரண்டு தீர்க்கதரிசிகள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர்களிடம் வருகின்றனர். அவர்கள் ஆயிரத்து இரு நூற்று அறுபது நாட்கள் பிரசங்கிக்கின்றனர். பாருங்கள்? ஒரு மாதத்தில் முப்பது நாட்கள் என்னும் உண்மையான கணக்கின்படி அது மூன்றரை வருட காலமாகும். அது தான் தானியேலின் எழுபதாம் வாரத்தின் கடைசி பாகம், எழுபதாவது வாரத்தின் கடைசி பாகம். பாருங்கள்?

தேவன் இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களுடன் ஈடுபடுவதில்லை. இல்லை ஐயா.

216 நமது சபையைச் சேர்ந்த ஒரு விலையேறப்பெற்ற அருமை சகோதரன் என்னிடம், "நான் இஸ்ரவேல் நாட்டுக்குச் சென்று பிரசங்கிக்க விரும்புகிறேன். அங்கு எழுப்புதல் உண்டாயிருக்கிறது என்று நான் நம்புகிறேன்" என்றார்.

217 ஒருவர் என்னிடம், "சகோதரன் பிரான்ஹாமே, நீங்கள் இஸ்ரவேல் நாட் டிற்கு இப்பொழுது செல்ல வேண்டும். அவர்கள் சத்தியத்தை இப்பொழுது புரிந்து கொள்கின்றனர்" என்றார், பாருங்கள், நீங் கள் அவ்விதம் செய்யக் கூடாது.

நான் அங்கு நின்று யோசித்தேன்...

218 அந்த யூதர்கள், “நான்...நல்லது இது, இயேசு—மேசியாவாயிருப்பாரானால், தீர்க்கதரிசியின் அடையாளத்தை அவர் செய்ய நான் காண வேண்டும். எங்கள் தீர்க்கதரிசிகளை நாங்கள் விசுவாசிக்கின்றோம். ஏனெனில் அவர்கள் அவ்வாறுதான் இருக்க வேண்டும்” என்று கூறினர்.

219 “என்ன ஒரு அமைப்பு!” “இதோ நான் போவேன்” என்றே நானும் எண்ணினேன். நான் கெய்ரோவுக்குச் சென்று, அங்கிருந்து இஸ்ரவேல் நாட்டுக்குச் செல்ல பயணச் சீட்டை வாங்கினேன். ஆகவே, “நான், நான் அங்கே அவர்கள் கேட்பார்களா என்று பார்ப்பேன், அவர்கள் தீர்க்கதரிசியின் அடையாளத்தைக் கண்டால், இயேசுவை ஏற்றுக்கொள்வார்களா என்று பார்க்கலாம்,” என்று நினைத்தேன்.

220 ஸ்டாக்ஹோம் சபையைச் சேர்ந்த லூயி பெட்ரூஸ் என்பவர் யூதர்களுக்கு லட்சக்கணக்கான வேதாகமப் பிரதிகளை அனுப்பி வைத்தார்.

221 அந்த யூதர்கள் அங்கே வருகின்றனர். நீங்கள் அந்த படதைப் பார்த்திருக்கிறீர்கள். அதை நீங்கள் "*நள்ளிரவுக்கு மூன்று நிமிடங்கள்*" என்னும் படக்காட்சியில் கண்டிருப்பீர்கள், நான் அதை வைத்துள்ளேன். உலகெங்கிலுமுள்ள யூதர்கள் புறப்பட்டு இஸ்ரவேல் நாட்டில் இப்பொழுது ஒன்று சேருகின்றனர்.

222 தளபதி ஆலன்பி (General Allenby) என்பவரின் காலத்தில் இங்கிலாந்து இஸ்ரவேல் நாட்டிற்குள் படையெடுத்தபோது, அதைக் கைப்பற்றியிருந்த துருக்கியர் சரணடைந்தனர். *உலக மகா யுத்தத்தின்*

*வீழ்ச்சி* என்னும் தலைப்பு கொண்ட புத்தகத்தின் இரண்டாம் பகுதியில் அது காணப்படுகின்றது என்று நான் நினைக் கிறேன். இங்கிலாந்து அந்நாட்டை இஸ்ர வேலருக்கு அளித்தது. இஸ்ரவேல் இப் பொழுது ஒரு தேசமாக வளர்ந்துக் கொண்டு வருகிறது. இப்பொழுது அது ஒரு முழுமையான தேசமாக உள்ளது. அவளுக்கு சொந்த நாணயம், நோட்டுகள், கொடி, இராணுவம் இவ்வனைத்தும் உள்ளன. பாருங்கள்?

223 இந்த யூதர்கள் தங்களுடைய தாய்நாட்டிற்கு திரும்பி வருகிற போது...முதலாவது அவர்கள் ஈரானிற்கு சென்று, அங்கே அவர்களிடத்தில் கேட்ட னர்...அப்பொழுது அவர்கள் அவர்களிடத் தில் கூறினது என்னவென்றால்...தாங்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு கொண்டு செல்லப்

பட வேண்டும். தங்களுடைய இடம் தங்களுக்கு அளிக்கப்பட வேண்டும், அவர்களுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றனர். பாலஸ்தீனா தேசம், அங்கு தான் அவர்கள் இருக்க வேண்டிய இடமாகும்.

224 ஆகவே, இஸ்ரவேலர் தங்கள் தேசத்தை விட்டு வெளியே இருக்கும் வரை, தேவனுடைய சித்தத்திற்குப் புறம் பாயிருக்கின்றனர் என்பதை ஞாபகங் கொள்ளுங்கள். ஆபிரகாமைப் போல, அது அவனுக்கு வாக்குத்தத்தமாக அளிக் கப்பட்டது. அப்பொழுது...

225 இஸ்ரவேலர் ஆகாய விமானத்தில் செல்ல மறுத்தனர். அவர்கள் அதைப் போன்ற ஒன்றைக் கண்டதேயில்லை. ஒரு

வயோதிக ரபீ, "இஸ்ரவேல் ஜனங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பும்போது, கழுகின் செட்டைகளில் சுமந்து கொண்டு செல் லப்படுவர் என்று எங்கள் தீர்க்கதரிசி கூறி யுள்ளார்." என்று கூறினாராம்—அதுதான் ஆகாய விமானம்.

226 இப்பொழுது அந்த நாடு வளர்ந்து கொண்டு வருகின்றது. அத்திமரம் துளிர் விட்டு வளரத் தொடங்கிவிட்டது. ஆமென்! தாவீதின் ஆறுமுனை கொண்ட கொடி மறுபடியும் அந்நாட்டில் பறக்கின் றது.

227 "புறஜாதியின் நாட்கள் எண்ணப் பட்டுள்ளன. அது அழிவால் நிரம்பி உள்ளது" உபத்திரவ காலம் மிகவும் அருகாமையில் உள்ளது.

228 ஆகவே சரியாக இங்கே முத்திரை கள் உடைக்கப்படுகின்றன. சபையும் பறந்து செல்ல ஆயத்தமாயிருக்கிறது.

229 அவள் சென்றவுடன், உபத்திரவ காலம் தொடங்கும். அப்பொழுது தேவன் கீழே வந்து அங்கிருந்து ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரை வெளியே இழுத்துக் கொள்வார். ஆமென். ஓ, அது பரிபூரணமாயுள்ளதே! முத்திரைகள் திறக் கப்படுவதன் மூலம் இது எந்தக் காலத்தில் சம்பவிக்கின்றது என்பதை அறியலாம். இப்பொழுது இது ஜனங்களுக்கு அளிக் கப்படும் கடைசி மூன்றரை வருட கால மாகும். நீங்கள் கவனிப்பீர்களானால் இந்தக் கடைசி மூன்றரை வருட காலத்தில் தேவன் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலா யிரம் யூதர்களை அழைப்பார்.

230 பாருங்கள், அவர் இன்னமும் அவர்களுடன் ஈடுபடத் தொடங்கவில்லை. அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசி இப்பொழுது இல்லை. தீர்க்கதரிசியைத் தவிர வேறு யாரையும் அவர்கள் விசுவாசிப்பதில்லை. அவர்களை நீங்கள் ஏமாற்ற முடியாது. ஆதலால் அவர்கள் ஒரு தீர்க்கதரிசிக்கு செவிகொடுக்கப்போகிறார்கள், ஆம் ஐயா, அவ்வளவுதான், அவர்கள் அதனோடு தரித்திருக்க வேண்டும் என்று தேவன் தொடக்கத்திலேயே அவர்களுக்குக் கூறி யுள்ளார்.

231 மோசே, “உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியை உங்கள் நடுவில் எழும்பப் பண்ணுவார். அவருக்கு நீங்கள் செவி

கொடுப்பீர்களாக” என்று சொல்லியிருக் கிறான். “தீர்க்கதரிசிக்கு செவி கொடாதவன் ஜனங்களின் மத்தியிலிருந்து அறுப்புண்டு போவான்.” அது உண்மை.

232 ஆகவே நீங்கள், பாருங்கள், அவர்கள் கண்கள் குருடாக்கப்படாமலிருந் தால், அவரை எளிதில் கண்டு கொண் டிருப்பார்கள், அவர்கள் குருடாக்கப்பட் டிருந்தால் அவர்கள்...சாத்தானுக்கு இடங் கொடுத்து “அவன் குறி சொல்லுகிறவன், பெயல்செபூல் என்றும், அவனுடைய இரத்தப் பழி எங்கள் மேல் சுமரட்டும். அவன் ஒன்றுமில்லை” என்றும் கூறினர். பாருங்கள்?

233 **பாவம், அந்த ஜனங்கள் குரு டாக்கப்பட்டனர். ஆகவேதான் அவர்கள்**

**ஏய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்டனர். உட்பிரவேசிக்க அவர்களுக்கு உரிமை யிருந்து. ஆனால் நம்மைத் தெரிந்து கொள் வதற்கென அவர்கள் சொந்த பிதா அவர் களைக் குருடாக்க வேண்டியதாயிற்று.**

234 இது வேதத்தில் காணப்படும் மிகவும் பரிதாபமான ஒரு செயலாகும். யூதர்கள் தங்கள் சொந்த பிதாவின் இரத்தம் சிந்தப்பட வேண்டுமென்று கூக்குரலிடும் காட்சியைப் பாவனை செய்து பாருங்கள்! அவர்களுடைய சொந்த தேவன் இரத்தம் சிந்தினவராய் அங்கு தொங்கிக் கொண் டிருக்கிறார். பாருங்கள், "அங்கே அவர்கள் அவரைச் சிலுவையிலறைந்தார்கள்" என்று வேதம் கூறுகின்றது. அவை மிகவும் முக்கி யம் வாய்ந்த நான்கு வார்த்தைகளாம். பாருங்கள், "அங்கே" உலகிலேயே மிகவும்

புனிதமான பட்டிணமாகிய எருசலேமில், “அவர்கள்”—உலகிலேயே மிகவும் பரிசுத்தமான ஜனங்கள், “அவரை”—உலகிலேயே மிகவும் முக்கியம் வாய்ந்த ஒருவரை “சிலுவையிலறைந்தார்கள்”. உலகிலேயே மிகவும் கொடூரமான மரணம். பாருங்கள்? ஏன்? பக்தியுள்ள அந்த ஜனங்கள்—உலகிலேயே மிகப் பெரிய மார்க்கத்தைச் சார்ந்தவர்கள்—உலகில் காணப்படும் ஒரே ஒரு உண்மையான மார்க்கத்தைச் சார்ந்தவர்கள், வருவார் என்று வேதம் அறிவித்திருந்த அதே தேவனைச் சிலுவையிலறைந்தனர்.

235 அவர்கள் ஏன் அதைக் காணவில்லை? அவர்கள் காணாதவாறு தேவன் அவர்களைக் குருடாக்கினாரென்று வேதம்

கூறுகின்றது. அவர்கள்...“என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் சொல்லக் கூடும்?” என்று இயேசு அவர்களைக் கேட்டார். வேறுவிதமாகக் கூறினால், “நான் செய்வேனென்று வேதம் தீர்க்கதரிசனம் உரைத்ததை நான் செய்யாமல் இருந்தால் என்னைக் கேளுங்கள்” என்று அவர் சொன்னார். “அவிசுவாசமே” *பாவமாகும்*. தேவன் கூறியதை அவர் அவ்வாறே செய்து முடித்தார். அவர்களோ அதைக் காணக் கூடாமற்போயிற்று.



இப்பொழுது, கிறிஸ்துவின் மரணத்திற்கும் சபை எடுக்கப்படுதலுக்கும் இடையேயுள்ள காலத்தில் எய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்ட புஸ்தகத்தில் தங்கள் பெயர்களுடைய உண்மையான யூதர்கள் பலிபீடத்தின் கீழ் காணப்படுகின்றனர் என்று இம்முத்திரை உடைக்கப்பட்டதன் மூலமாக நாமறிகிறோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0322 — ஐந்தாம் முத்திரை

455 **இப்பொழுது, கிறிஸ்துவின் மரணத் திற்கும் சபை எடுக்கப்படுதலுக்கும் இடையே யுள்ள காலத்தில் எய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்ட புஸ்தகத்தில் தங்கள் பெயர் களுடைய உண்மையான யூதர்கள் பலி பீடத்தின் கீழ் காணப்படுகின்றனர் என்று இம்முத்திரை உடைக்கப்பட்டதன் மூலமாக நாமறிகிறோம்.**

என் சகோதரனே, நீ அவர்களை கவ னித்தால், அவர்களால் பேச முடிகின்றது, சப்தமிட, பேச, செவிகொடுக்க முடிகின்றது என்றும், அவர்கள் ஐம்புலன்களையும்

கொண்டுள்ளனர் என்றும் வேதத்தின் படியாய் அறிந்துகொள்கிறோம்.

அவர்கள் கல்லறைகளில் ஒன்றுமறி யாத நிலையில் நித்திரை செய்து கொண் டிருக்கவில்லை. அவர்கள் விழித்துக் கொண்டு பேச, கேட்க முடிந்தவர்களாய் இருந்தனர். அது உண்மைதானே? [சபை யோர், “ஆமென்” என்று கூறுகின்றனர்.— ஆசி.] ஓ, எங்களுக்கு உதவி செய்வீராக!

நேர்மையான ஜனங்கள், அங்கே அவர்களில் மில்லியன்கணக்கானவர்கள், ஜெர்மானியர் அவர்களை சுட்டுக் கொன்றனர், அவர்களை கொலை செய்தனர், அவர்களைக் கொன்று, வேலிகளில் அவர்களை தொங்கவிட்டு, அவர்களை சுட்டெரித்துப் போட்டனர். அதாவது அவர்கள் பிணத்தையும் எரித்துப் போட்டனர்.

அந்த இரத்த வெறிபிடித்த ஹிட்லர், ஸ்டாலின், முசோலினி போன்ற கயவர்கள் எல்லா யூதர்களையும் வெறுத்தனர்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0322 — ஐந்தாம் முத்திரை

284 கவனியுங்கள். தானியேலின் காலத்தில், "மேசியா வருவாரென்றும்," சரியாகக் கூறினால் பிரபுவாகிய "மேசியா" வருவாரென்றும், "அவர் தரிசனம் உரைப் பாரென்றும், இஸ்ரவேல் ஜனங்களுக்கு எழுபது வாரங்கள் விடப்பட்டிருந்தன. அந்த எழுபது வாரங்களின் மத்தியில் மேசியா சங்கரிக்கப்படுவார். அன்றாடக பலியும் நீக்கப்படும்" என்று தானியே லுக்குக் கூறப்பட்டது என்பது நினைவிருக் கட்டும். அது சரிதானே? [சபையோர், "ஆமென்" என்கின்றனர். —ஆசி.] "ஆனால் இன்னமும் மூன்றரை வாரங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன."

இந்த காலக்கட்டத்தில் அவர் புறஜாதி மணவாட்டியை எடுத்துச் செல்வார்.

285 இப்பொழுது, மணவாட்டி மேலே செல்கிறாள், மணவாட்டி மேலே சென்ற வுடனே, இரண்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரிடம் எழும்புவார்கள். பாருங்கள்?

286 **இரத்த சாட்சிகளாக மரித்த அந்த ஆத்துமாக்களின் பெயர்கள். உண்மையான யூதர்கள்—புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தன.**

**அவர்கள் சன்மார்க்க வாழ்க்கை நடத்தி யூதமார்க்கத்தை நல்ல முறையில் கடைபிடித் தனர்.**

**அவர்கள் எய்க்மன் போன்றவரால் கொல்லப்பட்டு உயிர்த்தியாகம் செய்தனர்.**

**நேர்மையான ஜனங்கள், அங்கே அவர்களில் மில்லியன்கணக்கானவர்கள், ஜெர்மானியர் அவர்களை சுட்டுக் கொன் றனர், அவர்களை கொலை செய்தனர், அவர்களைக் கொன்று, வேலிகளில் அவர்களை தொங்கவிட்டு, அவர்களை சுட்டெரித்துப் போட்டனர்.**

**அதாவது அவர்கள் பிணத்தையும் எரித் துப் போட்டனர்.**

**அந்த இரத்த வெறிபிடித்த ஹிட்லர், ஸ்டாலின் முசோலினி போன்ற கயவர்கள் எல்லா யூதர்களையும் வெறுத்தனர்.**

287 இந்த தேசம் நிலைநிற்கிற காரி யங்களில் ஒன்று, அவர்கள் யூதருக்கு எப் பொழுதும் மரியாதை அளித்து, யூதனுக்

குரிய ஸ்தானத்தை கொடுப்பதன் காரணம் என்று நான் நினைக்கிறேன். அது உண்மை. ஒரு யூதனை நீங்கள் கனப்படுத்தினால், தேவன் உங்களைக் கனப்படுத்துவார்.

288 ஆனால் புறஜாதியாரில் தேவ னுடைய கட்டளையைக் கைக்கொள்ளா தவர் இருப்பது போன்று யூதரிலும் உள்ள னர்.

289 ஆனால் ஒரு உண்மையான யூதனின் பெயரைத் தேவன் உலகத் தோற்றத்துக்கு முன்னரே புஸ்தகத்தில் எழுதிவைத்துள்ளார்.

பெயரெழுதப்பட்ட யூதர்கள் இந்த நேரத்தில் கொல்லப்படுகின்றனர்.

இது எவ்வளவு பரிபூரணமாய் உள்ளது என்று இப்பொழுது இதைக் குறித்து நினைத்துப் பாருங்கள்.

மில்லியன்கணக்கான அந்த களங்க மற்ற யூதர்களை உலகிலுள்ள நாடுகள் கொன்று போட்ட உடனே பிற்பாடு, சரியாக இந்த நேரத்தில், பலிபீடத்தின் கீழுள்ள அவர்கள் ஒவ்வொருவரும் என்ன நடந்தது என்பதை உணர்ந்து கொண்டதாக இங்கே வேதவாக்கியம் கூறுகின்றது. அவர் களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப் படுகின்றன (Right after them millions of slaughtered Jews, innocent people, by the nations of the world; here the Scripture says, right in this time, that they're each one under the altar, realize what's happened, and they're given white robes.).

290 “நல்லது, ஏன்? நான் இப்பொழுதே ராஜ்யத்துக்கு செல்ல முடியாதா?” என்று அவர்கள் கேட்கின்றனர். யூதருடைய ராஜ்யம் பூமியில் நிறுவப்பட வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். யோவான், இராஜ்யம் நிறுவப்பட வேண்டியதாயிருந்தது என்றான். பாருங்கள்.

இப்பொழுது இதுதான் இராஜ்ஜியத்தின் சுவிசேஷமாயுள்ளது, நீங்கள் பாருங்கள்.

291 ஆனால் யூதருடைய ராஜ்யம் இந்த—இந்த இரண்டு தீர்க்கதரிசிகளால் பிரசங்கிக்கப்படும். ஆகையால் இங்கே பூமியில் நிறுவப்பட இருக்கின்ற இராஜ்ஜியத்தைக் கவனியுங்கள்.

292 “பரலோக இராஜ்ஜியம் யூதர்களால் பிரசங்கிக்கப்படுகின்றது”...இல்லை நான் குறிப்பிட்டுக் கூறுவது “புறஜாதிகளுக்கு பிரசங்கிக்கப்படுகின்றது”.

293 ஆனால் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பிறகு யூதருடைய ராஜ்யம் இப்பூமியில் நிறுவப்படுகின்றது.

294 இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் பிரசங்கிக்கையில் என்ன சம்பவிக்கின்றது என்று இப்பொழுது கவனியுங்கள். பாருங்கள்?

295 இந்த—இந்த இரண்டு சாட்சிகளும் காட்சியில் எழும்பும் முன்னர்; யூதர்கள் எய்க்மன் போன்றவரால் கொல்லப்படுகின்றனர். அவ்வாறு கொல்லப்பட வேண்டுமென்று முன் குறிக்கப்பட்டவர்கள்

ஒவ்வொருவருக்கும் தேவ கிருபையினால் ஒரு வெள்ளை அங்கி கொடுக்கப்படு கின்றது. கவனியுங்கள். அவர்கள் ஒவ் வொருவருக்கும் ஒரு வெள்ளி அங்கி கொடுக்கப்படுகிறது. கவனியுங்கள்.

இப்பொழுது என்ன சம்பவிக்கிறது? அது சம்பவித்தவுடனே...

296 நான் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தாமதமாகிறதென்றும் நான் அறிகிறேன். பாருங்கள்,...அவர்க ளெல்லாம் நின்றவண்ணமாகவே இருக் கின்றனர். சகோதரரே, தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக! அந்நாளிலே உங்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கி கொடுக்கப்படுமென்று நான் நம்புகிறேன். பாருங்கள். அதிக நேரம் நிற்பதால் உங்கள் கால்கள் வலிக்கும். ஆகவே நிற்பதனால்

ஏற்படும் கஷ்டம் எனக்குத் தெரியும். இங்கே கவனியுங்கள்...சில வயோதிப ஸ்திரீகளும் நின்று கொண்டிருக்கின்றனர். சில ஆண்கள் எழுந்து அவர்கள் ஆசனங் களை ஸ்திரீகளுக்குக் கொடுத்ததையும் நான் கவனித்தேன். குழந்தையைக் கையி லேந்திக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீக்கும் ஆசனம் கொடுத்ததையும் நான்—நான்—நான்—நானறிவேன். இதையெல்லம் தேவன் காண்கின்றார் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். கவனியுங்கள். ஆனால் நான் உங்களை அதிக நேரம் தாமதிக்க வைக்க விரும்பவில்லை. செய்தி என்னவென்பதை நீங்கள் புரிந்து கொள்ள நான் உதவியா யிருந்தால், அதுவே நான் உங்களுக்கு செய்ய வேண்டுமென்கிற என் விருப்பம். பாருங்கள்?

297 இப்பொழுது இந்த யூதரைக் கவனியுங்கள். இந்த முத்திரை என்ன, பலிபீடத்திலுள்ள ஆத்துமாக்கள் யார் என்ற இந்த முத்திரையின் வெளிப்பாட்டை நீங்கள் காணவேண்டுமென்பதற்கே நான் இவ்விதம் செய்கிறேன். இப்பொழுது கவனியுங்கள்.

298 தானியேலின் எழுபது வாரங் களின் பிற்பகுதியில் "மேசியா சங்கரிக் கப்பட வேண்டும்" என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அது அந்த எழுபது வாரங்களின் மத்தியில் நிகழும் ஒரு சம்பவமாகும். நல்லது, எழில் பாதி எவ்வளவு? [சபையோர், "மூன்றரை" என்று என்கின்றனர்.—ஆசி.] மூன்றரை. கிறிஸ்து எத்தனை வருடம் பிரசங்கித்தார்? ["மூன்றரை."] அது சரி. "அந்த ஜனங் களுக்கு இன்னும் எத்தனை வருடங்கள்

நியமிக்கப்பட்டிருக்கின்றன?" (என்ன?) "மற்றொரு மூன்றரை வருடங்கள்."

299 இந்த மூன்றரை வருட காலத்திற்கு முன்பு புறஜாதி மணவாட்டி ஏழு சபையின் காலங்களில் தெரிந்து கொள்ளப்பட்டு, எடுக்கப்படுகின்றாள்.

300 **அதன் பின்னர், குருடாக்கப் பட்டதன் காரணமாக இந்த சாட்சிகளாக மரித்து, பலிபீடத்தின் கீழ் காணப்படும் யூதர்களிடம் தேவன் வந்து, "இது என்ன வென்பதை அறிந்து கொண்டீர்களா? உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளை அங்கியைக் கொடுக்கப்போகி றேன்" என்பார்.**

**அதற்கு அவர்கள், "இன்னும் எவ்வளவு காலம், ஆண்டவரே, நாங்கள் இப்பொழுதே**

புறப்பட்டுச் செல்ல வேண்டுமா?” என்று கேட்பார்கள்.

301 அதற்கு அவர் “இல்லை, இல்லை, இல்லை, இல்லை, உங்கள் உடன் சகோதர ரான யூதர்கள் கொலைசெய்யப்படும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். நீங்கள் கொலை செய்யப்பட்டதுபோல் அவர்களும் கொலை செய்யப்பட வேண்டும். மிருகம் அவர்களிடம் செய்து கொண்ட உடன் படிக்கையை முறித்தபின்பு, அவர்களைக் கொன்றுப்போடும்” என்பார்.



# அங்ஙனமாயின், பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யார்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 63-03-22 ஐந்தாம் முத்திரை

215. இப்பொழுது கவனியுங்கள். வெளிப்படுத்தல் 6:9ல் காணப்படும் பலி பீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்களைக் குறித்து சிந்திப்போம். இப்பொழுது இந்த விஷயத்தில் உண்மையாகவே நம் மிடையே கருத்து வேறுபாடு தோன்றப் போகிறது. ஆனால் சற்று கவனியுங்கள், சற்று... பாருங்கள்? நானுங்கூட உங்க ளைப்போன்றே வித்தியாசமான கருத்தைக் கொண்டிருந்தேன். ஆனால் அது சரியாக அமையவில்லை. பலிபீடத்தின் கீழ் காணப்படும் ஆத்துமாக்கள் ஆதி சபையில் இரத்த சாட்சியாக மரித்தவர்கள் என்று நானும் எண்ணியிருந்தேன். டாக்டர் யூரியா ஸ்மித் (Dr. Uriah Smith) என்ப

வரும் மற்றவரும் அவ்விதமே கூறியுள் ளனர். பாருங்கள். ஆனால் நானும் அவ் விதமே நினைத்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அதைக் குறித்த தரிசனத்தை எனக்குக் காண்பித்தபோது, அது நான் நினைத்தபடியல்ல.

நீங்கள் ஒருக்கால், 'நல்லது, எனக்கு அதைக் குறித்து தெரியாது' என்று சொல் லலாம்.

216. நல்லது, இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள்; நாம் அதை கண்டுபிடிக்கலாம். கவனியுங்கள். இவர் கள் மணவாட்டி சபையின் ஆத்துமாக் களல்ல. இல்லவே இல்லை, பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள், அங்கு காத்துக் கொண்டிருக்கும் மணவாட்டி சபையென் றும், அவர்கள் 'எதுவரைக்கும் ஆண்ட

வரே? எதுவரைக்கும் ஆண்டவரே?' என்று சத்தமிடுவதாகவும் எண்ணியிருந்தோம். அதை நான் மறுபடியும் படிக்கிறேன். அப்பொழுது அதை நன்றாகப் புரிந்து கொள்வோம்;

**அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன்.**

217. பாருங்கள்: "தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும்..!.." அதை மனதில் பதித்துக் கொள்ளுங்கள். ஒரு நிமிடம் பொறுங்கள், பாருங்கள்?

அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, (பாருங்கள்?) தேவரீர் பூமியின் மேல் — குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் (பாருங்கள்?) நியாயத் தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப் போலக் கொலை செய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னும் கொஞ்ச காலம் இளைப்பாற

**வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.**

218. இப்பொழுது, ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, **சபை** ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது என்பதைக் கவனி யுங்கள். அப்படியானால் இவர்கள் ஆதி சபையின் காலத்தில் கொல்லப்பட்டவர்கள் அல்ல.

219. இப்பொழுது, இப்பொழுது, தயவு செய்து உங்கள் கவனத்தைச் செலுத்துங் கள். ஏனெனில் இது வாக்குவாதமுள்ள ஒரு பிரச்சினை. ஆகவே நீங்கள் நன்றாய் கவனிக்க வேண்டும் என்று நான் விரும் புகிறேன். குறித்துக் கொள்ள உங்களிடம் காகிதமும் எழுதுகோலும் இருக்கின் றன. இப்பொழுது, இதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

220. இப்பொழுது, ஆதிகாலத்தில் இரத்தசாட்சிகளாய் மரித்த நீதிமான்களும், சபை காலங்களிலிருந்த மற்ற நீதிமான் களும் - மணவாட்டி சபை - இது நிகழும் போது ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்ட படியால், அவர்கள் பலிபீடத்தின் கீழ் இருக்கமுடியாது. அவர்கள் மகிமையில், மணவாட்டியுடன் இருப்பார்கள். இப் பொழுது கவனியுங்கள், வெளிப்படுத்தல் 4-ம் அதிகாரத்தில் அவர்கள் எடுக்கப் பட்டனர்.

221. **அங்ஙனமாயின், பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யார்? அதுதான் அடுத்த காரியமாகும். அவர்கள் ஆதி சபை காலத்து சபையல்ல என்றால் பின் அவர்கள் யார்? அவர்கள்தாம் ஒரு தேசமாக இரட் சிக்கப்படவிருக்கும் இஸ்ரவேலர், அவர்கள்**

**முன்குறிக்கப்பட்டவர்கள். அவர்கள் இஸ்ரவேலர். அவர்கள் இஸ்ரவேலரே.**

222. நீங்கள், 'ஒரு நிமிடம் பொறுங்கள், அது ஒருக்காலும் இல்லை' என்று சொல்லலாம். நான் கூறுவது உண்மை. ஓ, ஆம், அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும்.

223. இந்த சச்சரவை இப்பொழுது ஒரு நிமிடத்தில் நாம் தீர்த்துக் கொள்ளலாம். அதைக் குறித்த ஐந்து அல்லது ஆறு வேதவாக்கியங்கள் உண்டு. அவைகளிலிருந்து ஒரு வேத வாக்கியத்தை மாத்திரம் இப்பொழுது தெரிந்து கொள்ளலாம். ரோமருக்கு எழுதிய புத்தகத்தில் 11-ஆம் அதிகாரத்தில் நாம் அதைக் காணலாம். முதலில் நாம் சற்று படிப்போம். அப்பொழுது, நாமே அதை பெற்றுக் கொள்வோம். ரோமர் 11ம் அதிகாரம், 25, 26

வசனங்களைப் பார்ப்போம். இப்பொழுது, பவுல் கூறிவதைக் கவனிப்போம்.

224. பவுல், "அவன் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவி சேஷத்தை" (என்ன) வானத்திலிருந்து வந்த தூதன் பிரசங்கித் தாலும் அவன் சபிக்கப்பட்டவனாயிரக்கடவன் என்று கூறியுள்ளான். கவனியுங்கள்.

**மேலும், சகோதரரே, நீங்கள் உங்க ளையே புத்திமான்களென்று** (அங்கே பாருங்கள்) **எண்ணாதபடிக்கு ஒரு இரக சியத்தை** (ஊம்) **நீங்கள் அறியவேண்டு மென்றிருக்கிறேன்: அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக் குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.** (ஆங்கிலத்தில், இஸ்ரவேலருக்குச் சிறிது

குருடான நிலை ஏற்பட்டுள்ளது என்னும் அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது - தமிழாக்கியோன்).

225. கடைசி புறஜாதி மணவாட்டி உட்பிரவேசிக்கும்வரை இஸ்ரவேலர் குருடாயிருப்பார்கள்.

**இந்த பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்: எழுதப்பட்டுள்ளபடி மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்.**

226. நான் கூறினது சரியா? இப்பொழுது பலிபீடத்தின் கீழுள்ளவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள். கவனியுங்கள். நாம் இரட்சிக்கப்படுவதற்கென இஸ்ரவேலர் குருடாக்கப்பட்டனர். அதை நீங்கள்

நம்புகின்றீர்களா? (சபையார் "ஆமென்'' என்கின்றனர் - ஆசி) யார் அவர்களை குருடாக்கினது? தேவன். தேவன் தம் சொந்த பிள்ளைகளைக் குருடாக்கினார்.

227. இயேசுவின் இரத்தம் சிலுவை யில் சிந்தப்படவேண்டுமென்று அவர்கள் கூக்குரலிட்டுக் கெக்கலித்ததில் (howling) அதிசயமொன்றுல்லை. அவர்கள் அவரு டைய பிள்ளைகள். அவர் வேத வார்த்தை. அவர் தாமே வார்த்தையாயிருந்தார். அவர் கள் அவரைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள் வார்கள் என்று அவர் அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் அவரை அறிந்துகொள் ளாதபடிக்கு அவர்கள் கண்களைக் குருடாக் கினார். அவர் எளிமையான விதத்தில் தோன்றி அவரை ஏற்றுக்கொள்ளாதவாறு அவர்களைக் குருடாக்கினார். பாருங்கள்? அவர்கள் அவ்விதம் செய்வார்கள் என்று

வேதம் கூறுகிறது. அவர் அவர்களை குருடாக்கினார். அவர்கள் குருடாக்கப்பட்டனர். இயேசுவும் அவர்கள் மேல் பரிதாபம் கொண்டு, ''பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்று ஜெபித்தார். பாருங்கள்? அவர்கள் குருடாயிருந்தனர். அவர்கள் ஒரு நோக்கத்துக்காக குருடாக்கப்பட்டதாக பவுல் அறிவிக்கிறான் - நமக்காக.

228. கவனியுங்கள். இதை நீங்கள் நன்கு கவனிக்க விரும்புகிறேன். "அவர்களுக்கு அங்கிகள் கொடுக்கப்பட்டன.'' அவர்களிடம் அங்கிகள் இல்லாமலிருந்தன. அவர்கள் ஒவ்வொருவரும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் பரிசுத்தவான்களுக்கு ஏற்கனவே அங்கிகள் இருந்தன; அவர்கள் அதை இங்கே

பெறுகின்றனர். ஆனால், அங்கே ''அவர்களுக்கு அங்கிகள் கொடுக்கப்பட்டன''. பரிசுத்தவான்களுக்கு ஏற்கனவே அங்கிகள் இருந்தன. அவர்கள் சென்றுவிட்டனர். பாருங்கள்? பாருங்கள்? அவர்கள்...

229. ஆனால் இஸ்ரவேலருக்கோ தருணம் அளிக்கப்படவில்லை. ஏனெனில் தேவனுடைய கிருபையானது நிறைவேறத் தக்கதாக புறஜாதி களிடத்திலிருந்து மணவாட்டியானவள் தெரிந்தெடுக்கப்படுகிறாள். அதுசரியா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் -ஆசி).

230. யோசேப்பின் வரலாற்றிலிருந்து ஒரு அழகான உதாரணத்தை எடுத்துரைக்க விரும்புகிறேன். தேவ ஆவியைப் பெற்றிருந்த யோசேப்பு கழுகு - அவன் சகோதரர்கள் மத்தியில் பிறந்தான், அவ்வாறே

உண்மையான சபையும் பிற சபைகளின் மத்தியில் தோன்றினது, அவன் சொப்ப னங்களின் அர்த்தத்தை விவரித்தான். அவன் தரிசனங்களைக் கண்டான். இத னால் அவனுடைய சகோதரர் அவனை வெறுத்தனர். அவன் பிதாவோ அவனை நேசித்தார்.

231. கவனியுங்கள். அவன் தன் சகோ தரரால் புறக்கணிக்கப்பட்டான் என்பதைக் கவனியுங்கள்-அவன் தகப்பனால் அல்ல. அவர்கள் அவனை ஏறக்குறைய முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டனர். அவனைக் குழியில் தள்ளி அவன் மரித்துப் போனான் என்று எண்ணினர்.

232. ஆனால் குழியிலிருந்து அவன் எடுக்கப்பட்டு, பார்வோனின் வலதுபாரி சத்திலே உட்கார்ந்தான். ஆகவே அவனு

டைய சகோதரர் அவனைத் தள்ளி விட்டதன் விளைவாய் அவனுக்கு ஒரு புறஜாதி மணவாட்டி கொடுக்கப்பட்டாள். தன்னுடைய சொந்த ஜனங்களிலிருந்தல்ல. அதனால், அவன் எப்பிராயீமையும், மனாசேயையும் பெற்றான். அவர்கள் இஸ்ரவேல் கோத்திரத்தில் சேர்க்கப்பட் டனர்.

233. அவன் கைகளைக் குறுக்கே வைத்ததனால் ஆசீர்வாதம் மூத்தவனிடத் திலிருந்து இளையவனுக்குச் சென்றது - யூதரிலிருந்து புறஜாதிகளுக்கு, பாருங்கள்? அதாவது, இளைய சபைக்கு ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது. அவன் தன் கைகளை குறுக்காக வைத்தான். தாய்சபை சூரியனில் வீற்றிருந்து இக்குழந்தையை ஈன்றாள். அவனைப் பெறும்படியாக இஸ்ரவேல் தன் கைகளை குறுக்கே வைத்தான். இது ஒரு

முன்னடையாளமாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். ஆகவே, யோசேப்பு...

யோசேப்பின் இருகுமாரரும் புறஜாதிதாயிலிருந்து தோன்றியவர்கள்.

234. ஆகவே இஸ்ரவேல் மணவாட்டியும், யாக்கோபின் கரங்களைக் குறுக்கிடச் செய்த அதே பரிசுத்த ஆவியின் மூலமாய், அவர்கள் கொண்டிருந்த வைதீக முறைகளைக் கைவிட்டு, கிறிஸ்தவ முறைகளை அனுசரிப்பார். யாக்கோபு, "தேவன் என் கைகளைக் குறுக்கிடும்படி செய்தார்" என்றான். அவனாகவே அதைச் செய்யவில்லை.

235. கவனியுங்கள், யோசேப்பு அவன் சகோதரரால், அவன் ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு புறஜாதி மணவாட்டியைப்

பெற்றுக் கொண்டான். இயேசுவும் தம் சொந்த ஜனங்களாகிய யூதரால் புறக் கணிக்கப்பட்டு புறஜாதி மணவாட்டியைப் பெற்றுக்கொண்டார்.

236. இப்பொழுது நாம் சிலவற்றைப் படிப்போம். அப்போஸ்தலர் 15:22ஐ நான் இங்கு குறித்து வைத்திருக்கிறேன். ஓ, நாம் எப்படியாயினும் இதைப் போன்றதையே போதிக்க வேண்டியுள்ளோம். இப் பொழுது, நான் இதை சரியாகக் குறித்து வைத்துள்ளேன் என்று நம்புகிறேன். அப்போஸ்தலர் 15:14 சரி. இது இப்பொழுது சரியாகவே உள்ளது என்று நான் நம்புகிறேன். சரி. ''சிமியோன் விவரித்துச் சொன்னாரே...'' இல்லை. நாம் 13-ம் வசனத்திலிருந்து ஆரம்பிப்போம்.

**அவர்கள் பேசி முடித்த பின்பு, யாக்கோபு அவர்களை நோக்கி...**

237. இப்பொழுது, என்ன நேர்ந்த தென்று பாருங்கள். அவர்கள் யூதரா யிருந்தும் புறஜாதிகளிடம் சென்றதால், பாருங்கள்? அவர்களிடையே முறுமுறுப்பு உண்டானது. பாருங்கள்?

**அவர்கள் பேசி முடிந்தபின்பு, யாக் கோபு அவர்களை நோக்கி, ....சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள்.**

**தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி, முதன்முதல் அவர்க ளுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன்** (அதாவது, சீமோன் பேதுரு) **விவரித்துச் சொன்னாரே.**

238. ஊம். பாருங்கள். என் மனைவி யின் பெயர் ப்ராய் (Broy) என்பதாகும். ஆனால் நான் அவளை விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் பிரன்ஹாம் என் னும் பெயரை ஏற்றுக்கொண்டாள். பாருங் கள்?

239. இயேசுவும் புறஜாதிகளிலிருந்து தம்முடைய சபையை அல்லது தம் மணவாட்டியைத் தெரிந்துகொண்டார் என்று வேதவாக்கியம் கூறுகிறது. யோசேப்பு அதற்கு உதாரணமாயிருக் கிறான்.

240. இப்பொழுது கவனியுங்கள். பலி பீடத்தின் கீழ் காணப்படும் ஆத்துமாக்கள் எய்க்மன் (Eichman) போன்ற பாவம் நிறைந்தவர்களால் கொல்லப்பட்டு, உயிர்த் தியாகம் செய்து மரித்தனர். பாருங்கள்?

கோடிக்கணக்கில் மரித்த அவர்கள், தங்கள் கொண்டிருந்த சாட்சியில் நிலைநின்றனர். ஆனால் அவர்களெல்லாரும் யூதர்கள்.

241. இப்பொழுது, ஞாபகங் கொள் ளுங்கள் அது என்ன? ''அவர்கள் தேவ வசனத்தினிமித்தம் கொல்லப்பட்டனர்'' என்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவுக்கு சாட்சியாக அல்ல. இது உங்களுக்குப் புரிகின்றதா?

242. ஆனால் நினைவில் கொள் ளுங்கள். சபையின் காலத்தில் இரத்த சாட்சிகளாக மரித்தவர்கள். தேவவசனத் தினிமித்தமும், கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் மரித்தனர் என்பதை ஞாபகங் கொள்ளுங்கள். அதை உங்களில் எத்தனை பேர் அறிந்திருக்கிறீர்கள்? (சபை

யார் "ஆமென்'' என்கின்றனர்-ஆசி) ஆம். சரி.

243. இப்பொழுது... ஆனால் பலிபீடத் தின் கீழேயுள்ள ஆத்துமாக்கள் கிறிஸ்து வைப் பற்றிய சாட்சியை உடையவர் களாயிருக்கவில்லை.

**"…. தேவ வசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும்"**

244. அவர்கள் யூதர்கள், ஹிட்லர் அவர்களை வெறுத்தான். அவ்வாறே எய்க்மனும், ஸ்டாலினும், உலகிலுள்ள ஏனையோரும் அவர்களை வெறுத் தனர். பாருங்கள்? ஆனால் அவர்களோ தாங்கள் விசுவாசத்திற்கு உண்மையுள்ளவர்களா யிருந்தனர். அவர்கள் யூதர்களாயிருந்த படியால் இவர்களால் (ஹிட்லர், எய்க்

மான், ஸ்டாலின் போன்றோரால் - தமிழாக்கியோன்) கொல்லப்பட்டனர்.

245. மார்டின் லூதரும் அவர்களைக் குறித்து தப்பெண்ணம் கொண்டிருந்தார் என்பதை நீங்கள் அறிவீர்களா? அது உண்மை . "அவர்கள்தான் அந்திக்கிறிஸ்து, ஆகவே, அவர்கள் எல்லாரும் புறம்பாக்கப்பட வேண்டுமென்று" அவர் கூறினார். அவர் வேறொரு யுகத்தைச் (Another dispensation) சேர்ந்தவராதலால் தேவனுடைய வார்த்தையை சரிவர அறிந்து கொள்ள முடியவில்லை.

246. ஆனால் இப்பொழுதோ, தேவனுடைய சத்திய வார்த்தை வெளிப்படுத்தப் படுகின்றது. இஸ்ரவேலர் எப்பொழுதுமே குருடாயிருக்க முடியுமா? ஒருக்காலும் இல்லை.

247. அன்றொரு நாள் பாளயத்தின் கடைசியிலிருந்தவர்களை தீர்க்கதரிசிக்கு காண்பித்தபோது, அவன் இஸ்ரவேலரிடம் ''நீங்கள் காண்டாமிருகத்தைப் போன்றிருக்கிறீர்கள்'' என்று சொல்லவில்லையா? மேலும் அவர் “உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பான். உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டிருப்பான்'' எனக் கூறவில்லையா? அது உண்மை. ஓ, சகோதரனே! அப்படியானால் அவர்கள் எங்ஙனம் நிரந்தரமாகக் குருடராயிருக்க முடியும்?

248. தேவன் அவர்களை மறந்துவிடுவாரென்று இஸ்ரவேலர் ஒருமுறை நினைத்திருந்தனர். யூதர்களுக்கு இக்கட்டான சமயம் வருவதை அந்த தீர்க்கதரிசி கண்டான். தேவனுடைய வார்த்தை அங்கே நின்றிருந்த தீர்க்கதரிசியிடம் பொழிந்த

போது, அவன் கர்த்தரிடம், 'ஆண்டவரே, உம் ஜனங்களை நீர் மறந்துவிடுவீரோ?' என்று முறையிட்டான்.

அப்பொழுது அவர் 'உன் கையி லிருப்பது என்ன என்று கேட்டார்.

அவன், 'அளவுகோல்' என்று பதி லுரைத்தான்.

249. அவர், "வானம் எவ்வளவு உயர மென்றும், சமுத்திரம் எவ்வளவு ஆழ மென்றும் உன்னால் அளக்க முடியுமா?'' என்றார். ஊஊஊம்

அவன் முடியாது. என்றான்.

250. அவர் 'அப்படியானால் நானும் இஸ்ரவேலை ஒருபோதும் மறப்பதில்லை'

என்றார். இல்லை ஐயா! அவர் இஸ்ர வேலை ஒருபோதும் மறக்க முடியாது.

251. அவர் தமது பிள்ளையை குரு டாக்க வேண்டியதாயிருந்தது. சற்று யோசித்துப் பாருங்கள்! நமக்குத் தருணம் அளிப்பதற்கென அவர் தமது பிள்ளை யைக் குருடாக்கினார். நாமோ அதை உதறித் தள்ளுகிறோம். நாம் ஒன்று மற்றவர் என்பதை அது அறிவுறுத்த வில்லையா? நாம் எவ்வளவாக நம்மை தாழ்த்தினாலும், அதை நாம் அறிந்து கொள்ளமுடியாது. ஓ. என்னே! ஆம்.

252. "அவர்கள் தேவனுடைய வார்த் தையைப் பற்றிக் கொண்டிருந்தனர்." அவர் கள் யூதர்கள்', அவர்களுக்கு நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் அவர்கள் நிலைத்திருந்தனர். நேற்று

இரவைக் குறித்து உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? பாருங்கள்? அதில் அவர்கள் நிலைத்திருந்தனர். அவர்கள் யூதர்கள். அவர்களிடம் தேவனுடைய நியாயப் பிரமாணம் இருந்தது. நியாயப்பிரமாணம் தேவனுடைய வார்த் தையாயிருந்தது. அதில் அவர்கள் நிலைக்கொண்டிருந்தனர். அது உண்மை அவர்கள் கடைபிடித்திருந்த சாட்சியினிமித்தம் உயிர்த்தியாகம் செய்து மரித்தனர். அவர்கள்தாம் சபை எடுக்கப் பட்ட பின்னர் பலிபீடத்தின் கீழ் காணப் படும் ஆத்துமாக்கள்.

253. இப்பொழுது, கவனியுங்கள். அவர்களுடைய குருட்டுத்தனத்தினால் அவர்களுடைய மேசியாவைச் சங்கரித் தனர். அதன் பலனை இப்பொழுது அவர் கள் அனுபவிக்கின்றனர். சபை எடுக்கப் பட்ட பின்னர் அவர்கள் இதை அறிந்து

கொள்வார்கள். தேவனுடைய பலிபீடத்தின் முன் அவர்கள் வரும்போது, அதை உணரு வார்கள். ஆனால், தேவனுடைய கிருபை அவர்களுக்கு இப்பொழுது வருகிறது.

254. கவனியுங்கள், இப்பொழுது, அவர்கள் பரிசுத்தவான்களில்லை. ஏனெ னில் பரிசுத்தவான்கள் ஏற்கனவே அங்கி கள் தரித்திருப்பார்கள். ஆனால் இவர்கள் தேவவசனத்தினிமித்தமும், தேவனுடைய பிள்ளைகள் என்பதால் அவர்கள் கொண் டிருந்த சாட்சியினிமித்தமும் கொல்லப் பட்டு, இப்பொழுது பலிபீடத்தின் கீழ் காணப்படும் ஆத்துமாக்கள், யூதர்கள்.

255. ஆனால் இப்பொழுது, கவனி யுங்கள். சபை எடுக்கப்பட்ட பின்னர் தேவ னுடைய கிருபை அவர்களுக்குண்டாகி, இயேசு அவர்கள் ஒவ் வொருவருக்கும்

வெள்ளை அங்கியைக் கொடுக்கிறார். ஏனெனில் அவர்கள் தங்கள் நோக்கத்திற்கு உண்மையாயிருந்தனர். அவர்கள் குருடாக் கப்பட்டனர். ஆனால் அவர்கள் குருட ரென்று அறியாமலிருந்தனர். அவர்கள் அதை அறியவில்லை. அவர்கள் செய்ய வேண்டுமென்று தேவன் முன் குறித்ததை அவர்கள் சரியாகச் செய்து முடித்தனர். இங்கே யோவான் இந்த ஆத்துமாக் களைத்தான் பலிபீடத்தின் கீழ் காண்கிறான். இப்பொழுது கவனியுங்கள். அவன் அந்த ஆத்துமாக்களைக் காண்கிறான். அவன் அவர்களை என்னவென்று அழைக்கிறான் என்பதைக் கவனி யுங்கள்.

''அவர்கள் எதுவரைக்கும் ஆண்ட வரே?'' என்று கதறுகின்றனர்.

'இன்னும் கொஞ்சக் காலம்' என்று அவர்களுக்குப் பதிலளிக்கப்படுகின்றது. என்பதைக் கவனியுங்கள். பாருங்கள்?

256. நாம் இப்பொழுது இதை வேத வாக்கியங்களின் வழியாக அறிந்து கொள் வோமாக. அவர்கள் மேசியாவைக் கொன்றுவிட்டதை உணருகின்றனர். பாருங் கள்? அவரைச் சிலுவையில் அறைந்த போது, அவர்கள் மேசியாவென்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் பின்னர் அவர்கள் தவறை உணருகின்றனர். பாருங்கள், அந்த கொலைக்கு அவர்கள் குற்றவாளிகளாய் இருந்ததனால் அவர்கள் கொல்லப்பட்டனர். பாருங்கள்? ''அவரு டைய இரத்தப் பழி எங்கள்மேல் சுமரட் டும்" என்று அவர்கள் சத்தமிட்டனர். பாருங்கள்? அது உண்மை. ஆனால்

அதைச் செய்யும் போது அவர்கள் குருடாக்கப்பட்டிருந்தனர்.

257. இப்பொழுது, அவர்கள் குருடாக் கப்பட்டிராமலிருந்தால் தேவன், "அவர் களை விட்டு விடுங்கள். அவர்கள் தகுதியற்றவர்கள்'' என்று கூறியிருப்பார். ஆனால் தேவனே அவர்களைக் குருடாக் கினதால் அவருடைய கிருபை அவர்க ளிடம் பெருகினது. ஆமென். அந்த அதிசயமான கிருபை! இஸ்ரவேலர் எல்லா ரும் இரட்சிக்கப்பட வேண்டுமாதலால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அங்கி கொடுக்கப்பட்டது. அவர் கள் ஒவ்வொரு வர் பெயரும் எழுதப்பட்டுள்ளது. அது உண்மை. இயேசு அவர்களுக்கு அங்கி களை அளிக்கிறார்.

258. யோசேப்பு தன் சகோதரருக்குச் செய்ததுபோல. அது ஒரு முன்னடையாள மாயிருந்தது. கவனியுங்கள், யோசேப்பு அங்கே நின்று, அவன் கடைசியாக... யோசேப்பு அவனை தன் சகோதரருக்கு வெளிப்படுத்தும் போது, அவன் தன் பீடத்திலே, சொந்த பீடத்திலே, சிங்கா சனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்பவ னாயிருந்தான். அவன் அப்பொழுது, ''எல்லோரும் என்னைவிட்டுப் போங்கள்'' என்று கட்டளையிட்டான். தன்னை தன் சகோதரருக்கு வெளிப்படுத்தும்போது அவன் மனைவி அரண்மனையில் இருந் தாள். அங்கு தான் மணவாட்டி இருப்பாள்.

259. ஆகவே, அவன் அவர்களிடம் "என்னை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளவில்லையா? நான்தான் உங்கள் சகோதரன்'' என்று எபிரேய பாஷையில்

கூறினான். ஓ, என்னே! அவர்கள், "இப் பொழுது, ஓ, நீர் எங்களுக்கு, தீங்கி ழைக்கப் போகின்றீர்'' என்றனர்.

260. அவனோ, "ஒரு நிமிடம் பொறுங்கள், ஒரு நிமிடம் பொறுங்கள். தேவன் ஒரு நோக்கத்திற்காக அதை நேரிடச் செய்தார். உயிரைக் காப்பதற்காக, என்னை நீங்கள் புறக்கணிக்கும்படி தேவன் செய்தார்.'', மகிமை! அங்கே பாருங்கள் - சரியாக உள்ளதை ''நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்'' யோசேப்பு அவ்விதம் கூறி னான் என்பது உண்மை. உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? அவன் "நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம். இப்பொழுது எல்லாம் சரியாக உள்ளது. எல்லாம் முடிந்து விட்டது. உங்களை உயிரோடு காக்கும்படிக்கு தேவன் என்னை உங்க ளுக்கு முன்னமே அனுப்பினார்'' என்றான்.

261. யூதர்களும் இயேசு வருவதைக் காணும்போது, ''நீர் மேசியா வென்று அறி வோம். ஆனால் அந்த வடுக்கள் எங்ஙனம் உண்டாயின?'' என்று கேட்பார்கள். பாருங் கள்?

262. அதற்கு அவர், ''என் சிநேகிதரின் வீட்டில் காயப்பட்டதனால் உண்டானவை'' என்று பதிலுரைப்பார். சிநேகிதர்?

263. அப்பொழுது மீதியாயுள்ள 1,44,000 பேர் அவர்கள் தவறை உணரு வர். ஒவ்வொரு குடும்பமும் நாட்கணக் காக தனித்தனியே புலம்பி இங்குமங்கும் நடந்து, ''ஐயோ! நாம் எங்ஙனம் இதைச் செய்தோம்? நாம் எங்ஙனம் இதைச் செய்தோம்? நமது மேசியாவை நாம் சிலுவையில் அறைந்துவிட்டோமே!" என்று விசாரிப்பார்களென்றும் வேதம்

கூறுகின்றது. அவர்கள் தங்கள் ஒரே பேறானவனுக்குப் புலம்புவது போல் அவருக்காகப் புலம்புவார்கள். "எப்படி நாங்கள் இதைச் செய்தோம்?"

264. **யூதர்கள் உலகிலேயே மிக பக்தி வைராக்கியம் கொண்டவர்கள். அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயினும், நமக்காக அவர்கள் குருடாக்கப்பட்டனர். ஆனால் நாமோ அதை அசட்டை செய்கிறோம். அப்படியானால் புறஜாதி சபைக்கு நேரிடவிருக்கும் நியாயத்தீர்ப்பு எவ்வளவு பயங்கரமாயிருக்கும்?** அங்கே பாருங்கள். பாருங்கள்? மணவாட்டியாகிய நம்மை புறஜாதிகளினின்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காக அவர்கள் குருடாக்கப்பட்டனர். அவர்களை அதனின்று எடுக்கும்படியாக... பாருங்கள்?

அவர் அதையும், ஒவ்வொன்றையும் முன்னடையாளமாக்கினார்.

265. பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யாரென்பதை இப்பொழுது நீங்கள் அறிந்துகொண்டீர்களா? அவர்கள் இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்கள் அல்ல. அவர்கள் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டனர். அது சரி. கவனியுங்கள், அவர்கள் எடுக்கப்பட்டுவிட்டனர். பாருங்கள்?

266. ஆகவே, ஒவ்வொருவருக்கும் ஒரு அங்கி அளிக்கப்பட்டது. ஆகவே, நீங்கள் இப்பொழுது கவனிக்க நான் விரும்புகிறேன். ஆனால் தேவனுடைய கிருபை இப்பொழுது அவர்களிடம் தாழ இறங்குகிறது.

யோசேப்பின் கிருபை அவன் சகோதரரிடம் உண்டானது போல், யூதர்களாகிய இவர்களிடம் தேவகிருபை உண்டாகி, அவர்கள் ஒவ்வொருவருக்கும் இயேசுவால் ஒரு அங்கி கொடுக்கப்படுகின்றது.

267. இப்பொழுது கவனியுங்கள். யோசேப்பின் சகோதரர் யோசேப்பை எவ்விதமாவது ஒழிக்க எண்ணினர். ஆயினும் அவனுடைய கிருபை அவனுடைய சகோதரர்களுக்குக் கிடைத்தது. பாருங்கள்? "ஓ, பரவாயில்லை. பரவாயில்லை. நீங்களாக அதைச் செய்யவில்லை.'' பாருங்கள்? தேவனே அதை நேரிடச் செய்தார். உங்களை உயிரோடு காப்பதற்கென தேவன் என்னை இப்புறஜாதிகளிடம் அனுப்பினார். அவர்களிடமிருந்து நான் என் மனைவியை மணந்து கொண்டேன். நான் உங்களிடமே தங்கியிருந்திருப்பேனாகில்

என் மனைவியை நான் அடைந்திருக்க முடியாது. அவளை நான் நேசிக்கிறேன். அவளும் எனக்குக் குமாரரைப் பெற்றாள். இப்பொழுது நான் உங்களையும் அழைத்துக்கொள்ளப்போகிறேன். நீங்களுங்கூட நன்மையைப் பெற்றுக் கொள்கிறீர்கள். நாமெல்லாரும் இனிமேல் ஒரே குடும்பமாக இனிது வாழ்வோம்' என்று யோசேப்பு கூறினான். பாருங்கள்? பாருங்கள்? பாருங்கள்? அவன் அவர்களிடம், "ஒன்றை மாத்திரம் கேட்க விரும்புகிறேன். என் தகப்பனார் இன்னமும் உயரோடிருக்கிறாரா?" என்றான். ஓ!

268. யோசேப்பு சிறிய பென்யமீனுக்கு என்ன செய்தான் என்பதைக் கவனியுங்கள். பென்யமீன் அந்த 1,44,000 பேர்களுக்கு முன்னடையாமாயிருக்கிறான். நாம் அதை பின்னர் காண்போம். பென்யமீனைக்

கண்ட போது யோசேப்பு என்ன செய் தான்? அவன் ஓடிப்போய் அவன் கழுத் தைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்தான். அவன் குடும்பத்தை விட்டு பிரிந்தபிறகு அவனுடைய தாயார் பெற்றெடுத்தப் பிள் ளைதான் இந்த பென்யமீன். அவ்வாறே இயேசுவும் புறஜாதி மணவாட்டியை ஏற்றுக் கொள்ளச் சென்றிருந்தபோது, அந்த வைதீக (Orthodox) சபையாகிய யூத சபை பெற்றெடுத்த பிள்ளைகள்தாம் இந்த 1,44,000 பேர். ஓ! என்னே! அது உங்க ளுக்கு பரவசமூட்டவில்லையா? அதுவே தான் அவர்கள் யாரென்று அறிந்துகொண் டீர்களா? அவர்கள் அங்கே உள்ளனர்.

269. இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் யோசேப்பை ஒழிக்க முயன்ற போதிலும் யோசேப்பின் கிருபை அவர் களுக்குக் கிடைத்தது.

270. அவ்வாறே யூதர்கள் இயேசுவை ஒழிக்க முயன்றனர். ஆனால் அவர் மறுபடியும் அவர்களிடம் வந்து, (ஏனெனில் அவர்கள் குருடாகியிருந்தனர்) அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அங்கியைக் கொடுத்து, அவர்களை எவ்விதத்திலாயினும் தம் வீட்டிற்கு அழைத்துச்செல்கிறார். அவர்களிடம் அவருக்கு எவ்வித வெறுப்புமில்லை. ஏனெனில், "அவர்களெல்லாரையும் நான் எப்படியாவது இரட்சித்துக் கொள்வேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

அவர்கள் பழிவாங்க வேண்டுமென்று விரும்பினர் என்று பத்தாம் வசனம் உரைக்கின்றது. பாருங்கள்.

271. ஆனால் மணவாட்டி பழிவாங்க விரும்பமாட்டாள். அவள் ஸ்தேவானைப்

போன்று, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்'' என்று சொல்லுவாள். பாருங்கள்?

272. எனவே, பழிவாங்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் யூதர்களாகத் தான் இருக்கவேண்டும். மறுபடியும் கவனியுங்கள், பாருங்கள், அவர் மறுபடியும் கூறினார். கவனியுங்கள். அது அல்ல. அவர், ''அவர்கள் உங்கள் சகோதரர்'' என்றார். யூதர். அந்த நூற்று... "அவர்கள் பழிவாங்க வேண்டும்'' என்றனர்.

273. "இன்னும் சற்று காலம் காத்திருக்க வேண்டுமென்று அவர்களிடம் கூறப்படுகின்றது. அதை நான் மறுபடியும் படிக்கிறேன். அவர்கள், ''நாங்கள்... நீர் எங்கள் நிமித்தம் அவர்களைப் பழிவாங்க வேண்டும்,'' என்றனர்.

**அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.**

**அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும், அவர்கள் தங்களைப் போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும்...**

274. பாருங்கள்? அது என்ன? தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலருக்குப் போதிக்கின்றனர். பாருங்கள்?

**தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்ச காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.**

275. பாருங்கள், அவர்கள் கொலை செய்யப்பட வேண்டுமென்று முன் குறிக் கப்பட்டுள்ளனர். நீங்கள் பாருங்கள்?

**தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்ச காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.**

276. பாருங்கள், அதாவது, அவர்கள் கொலை செய்யப்பட வேண்டுமென்று தேவனால் முன்னமே தீர்மானிக்கப்பட்டது. இவ்வேதவாக்கியம் அவ்வாறு கூறுகின்

றது. அதுவரைக்கும் அவர்கள் இளைப்பாற வேண்டும். 'இப்பொழுது நீங்கள் அங்கி களைப் பெற்றுக் கொண்டீர்கள். ஆகவே நீங்கள் உன்னத வீட்டை அடைவீர்கள். சிறிது காலம் காத்திருங்கள்' என்று அவர் களுக்குச் சொல்லப்படுகின்றது.

277. இப்பொழுது கவனியுங்கள். இப் பொழுது கவனியுங்கள். "ங்கள் சகோதரர், கொலை செய்யப்பட போகிறவர்களாகிய உங்கள் சகோதரர்" என்பதைக் கவனி யுங்கள். அவர்கள் சகோதரர்கள் கொல்லப் பட வேண்டும். அதாவது உபத்திரவ காலத்தில் அழைக்கப்படும் 1,44,000 பேர்.

278. நமக்கு இன்னும் சமயம் இருந்தால் நலமாயிருக்கும். கர்த்தருக் குச் சித்தமானால் நாளை இரவு நாம் வேறொரு முத்திரையைக் குறித்து தியானிக்கும்

முன்னர் இதைக் குறித்துப் பேசலாம். பாருங்கள்?

279. இப்பொழுது கவனியுங்கள். அவர்கள் அந்திக்கிறிஸ்துவால் கொல்லப் படவேண்டும். அவன் கடைசியாக முறை யாக சவாரி செய்யும்போது, யூதர்களுடன் அவன் செய்திருந்த உடன்படிக்கையை முறிக்கிறான். பாருங்கள்?

280. இந்த 1,44,000 யூதர்கள் வெளிப் படுத்தல் 11-ம் அதிகாரத்தில் கூறப்பட் டுள்ள இரண்டு சாட்களின் மூலம் வெளியே அழைக்கப்படுகின்றனர். இப் பொழுது, அவர்கள் தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும் என்பதை ஞாபகங் கொள் ளுங்கள்.

281. இவ்விரண்டு சாட்சிகளும் தீர்க்க தரிசினம் உரைக்கவேண்டுமென்று நீங்கள் வேதத்தில் படித்திருக்கிறீர்கள். உங்களில் அதை எத்தனைபேர் படித்திருக்கிறீர்கள் (சபையார் "ஆமென்" என்கின்றனர் - ஆசி) நிச்சயமாக, நாம் அனைவரும் வேதம் வாசிக்கும் பழக்கமுடையவராக இருக்கி றோம்.

282. அவர்கள் தானியேலின் எழுபது வாரங்களின் இரண்டாம் பகுதியில் தீர்க்க தரிசனம் உரைக்கின்றனர். அதுதான் கடைசி மூன்றரை வருடம்.



# பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள் யார்?




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து